விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 350 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 18 செவ்வாய்க்கிழமை (03.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஒதியமலைப் படுகொலை 40ஆம் ஆண்டு நினைவேந்தல்

### உணர்வெழுச்சியுடன் முன்னெடுப்பு



16

## யாழ்.இளைஞர்கள் கட்டாயமாக ரஷ்ய இராணுவத்தில் இணைப்பு

### ஆதாரமற்ற குற்றச்சாட்டு என ரஷ்ய தூதரகம் மறுப்பு

(கொழும்பு)
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் கட்டாயமாக ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளனர் என வெளியான தகவல்கள் ஆதாரமற்றவை என இலங்கைக்கான ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய தூதரகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

15

# மாவீரர்களை நினைவேந்த தமிழருக்கு முழு உரிமையுண்டு

## வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க

*(கொழும்பு)*
வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் தமது உறவுகளான மாவீரர்களை நினைவேந்த முழு உரிமையுண்டு. தெற்கில் அரசியலில் புறக்கணிக்கப்பட்டவர்களே மாவீரர் தின விவகாரத்தைக் கையில் எடுத்து இனவாத முரண்பாடுகளை மீண்டும் தோற்றுவிக்க முயற்சிக்கின்றனர் என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.



*(16ஆம் பக்கம் பார்க்க)*

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

(கொழும்பு)
10ஆவது பாராளுமன்றம் இன்று காலை 9.30 மணியளவில் சபாநாயகர் அசோக ரன்வல தலைமையில் கூடவுள்ளது.

இன்றைய தினம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளது. (ம-7)


## தொண்டைமானாறு

### நீரோட்டத்தில் இழுத்து செல்லப்பட்ட சடலம்?

(கரணவாய்)
வடமராட்சி தொண்டைமானாறு ஊடாக வங்கக் கடலை நோக்கி

15

## கல்வி அமைச்சுக்கு முன் போராட்டம்



- இரு பொலிஸார் காயம்
- மூவர் கைது

(கொழும்பு)
கொழும்பில் கல்வி அமைச்சுக்கு முன் இடம்பெற்ற போராட்டம் காரணமாக இரு பொலிஸார் காயமடைந்ததோடு மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குழுவொன்று இந்த

15

## கிளிநொச்சி மாவட்டத்தின் பொருளாதார நிலை தொடர்பில்

### கிளிநொச்சி பதில் அரச அதிபருடன் சுவிஸ் அதிகாரிகள் கலந்துரையாடல்



15

## சுதுமலையில்

### கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(மானிப்பாய்)
சுதுமலை தெற்குப் பகுதியில் உள்ள கிணற்றிலிருந்து ஆணொருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த மகாலிங்கம் கருணாகரன் (வயது-52) என்ற குடும்பஸ்தரே

15

## மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு

### கடற்றொழில் பிரதி அமைச்சர் உறுதி

(கொழும்பு)
நாட்டிலுள்ள மீனவர்கள் எதிர் நோக்கிவரும் பிரச்சினைகளுக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என கடற்றொழில் பிரதி அமைச்சர் ரி.ஜி.ரத்ன கமகே உறுதியளித்துள்ளார்.

திருக்கோவில் பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்த கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே அப்பிரதேசத்தில் வசிக்கும் மீனவர்

15

## உணவு வழங்க மறுத்தார் என கிராம சேவகருடன் தர்க்கம்

### கற்கோவளத்தில் இருவர் கைது

(கொழும்பு)
யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைத்திருந்த சில குடும்பங்களுக்கு உணவு வழங்க மறுத்தார் என கிராம சேவையாளருடன் முரண்பட்ட குற்றத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி, கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த சில குடும்பங்கள் வெள்ளம் காரணமாக இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளனர்.

அவர்களில் சில

15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அன்னலிங்கம் செந்தில்குமரேசன் (செந்தில்)

( பரியோவான் கல்லூரி பழைய மாணவரும்,
V.T Kandiah Store's உரிமையாளரும், வலி. வடக்கு
பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவாளரும், தாவடி ஸ்ரீ
அம்பலவாண வேதவிநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் )





தோற்றம் 29.05.1960 — மறைவு 01.12.2024

யாழ்ப்பாணம் தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் செந்தில்குமரேசன் அவர்கள் 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம் (ADR) - பரமேஸ்வரி(திராவியம்) தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் கௌரிதேவியின் அன்புக் கணவரும் டிலக்ஸன் (NORTHERN CENTRAL HOSPITAL), சுவாதிகன் (BESTECH ENGINEERING PVT LTD), சுவாரகன் (MANIPAY ANFGEL INTERNATIONAL SCHOOL TECHNICIAN) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தினி(London), கௌரி(London), ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இலங்கரத்தினம்(London), குகசேனன்செட்டியார் (London), கௌரிகுமாரன், சசிகுமாரன்(Swiss), சசிகலா(Swiss), ரசிகலா(Swiss) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2024) புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"கணேசன் கருணை"
தாவடி மானிப்பாய் வீதி,
பிள்ளையார் கோவிலடி, தாவடி.

தகவல் :
குடும்பத்தினர்

(2659)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையின் பின்னரே உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான அறிவிப்பு

## தேர்தல் ஆணையம் முடிவு

(கொழும்பு)

**2024 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.**

இது தொடர்பான அறிவிப்பு தற்சமயம் வெளியிடப்பட்டால் பரீட்சை காலத்தின் போது வேட்பாளர்கள் பிரசார நடவடிக்கைகளை தொடங்குவார்கள்.

எனவே பரீட்சைக்கு இடையூறு ஏற்படும் என்பதால் அது முடியும் வரை தேர்தல் தொடர்பான அறிவிப்பை வெளியிட வேண்டாம் என முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

மோசமான காலநிலை காரணமாக சில நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட பரீட்சை நடவடிக்கைகள், இந்த வாரம் மீண்டும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான விசேட கட்சித் தலைவர் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான வேட்புமனுக்களை மீளப் பெறுவது தொடர்பிலும் இதன்போது இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (நி-8)

# அரிசி விலையை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஐக்கிய அரிசி உற்பத்தியாளர் சங்கம்

(கொழும்பு)

அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், கீரி சம்பாவின் விலை 300 ரூபாவாகவும் நாட்டரிசி 270 ரூபாவாகவும் சம்பா 290 ரூபாவாகவும் விலைபோவதை தடுக்க முடியாது என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பிலேயே முதித் பெரேரா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தற்போது சந்தையில் நாட்டு அரிசிக்கு அதிக தட்டுப்பாடு நிலவி வருவதால், கடைகளில் நாட்டு அரிசி கிடைப்பதில்லை.

இதை கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யாமல் அதிகளவில் இருப்பு வைத்துள்ள அரிசியை மதிப்பிட வேண்டும்.

பண்டிகைக் காலங்களில் நெல்லை அரிசியாக மாற்றி நுகர்வோருக்கு குறைந்த விலையில் வழங்குவதற்கான சூழலை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் விலையைக் கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வது தீர்வாகாது.

அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தி அரிசியின் தேவை மற்றும் விநியோகத்திற்கு இடம் கொடுப்பதுடன் அரிசி விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாப்பதற்கான அவசர வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் முதித் பெரேரா மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-8)

# இனப்பிரச்சினைக்கு தீர்வாக புதிய அரசியல் சாசனம் வேண்டும்

## செல்வம் எம். பி

(மன்னார்)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எந்தக் காலத்திலும் புதிய அரசியல் சாசனத்தின் ஊடாக நிறுத்தக் கூடாது எனவும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் புதிய அரசியல் சாசனம் அமைய வேண்டும் எனவும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


மேலும் தெரிவிக்கையில், புதிய அரசியல் சாசனத்திலே 13 ஆவது திருத்தச் சட்டம் இல்லாது ஒழிக்கப்படும் என ஜே.வி.பி. யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இதன் நோக்கம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மீறுகின்ற ஒரு செயற்பாடாக அமையும். ஒரு அரசியல் சாசனம் வருகின்ற போது தமிழ் தரப்பின் ஆலோசனையும் பெற்று அதன் பின்னர் அரசியல் சாசனம் எழுதப்பட வேண்டும்.

எங்களுக்கு இனப்பிரச்சினை இருக்கிறது. அதற்கு தீர்வு தருகின்ற வகையில் புதிய அரசியல் சாசனம் அமைய வேண்டும். அதே போல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் 13 ஆவது திருத்தச் சட்டமும் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை புதிய அரசாங்கமும் ஜனாதிபதியும் செயற்படுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது. என தெரிவித்தார். (6-8-285)

# வரலாற்றை பொய்யாக்கும் புலம்பெயர் அமைப்புகள்

## தேரர் சாடல்



(கொழும்பு)

பௌத்தர்களிடையே பிரிவினைகளை ஏற்படுத்துவதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சதித் திட்டங்களை மேற் கொண்டு வருவதாகக் கலாநிதி ஓமல்பே சோபித்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இந்த சதித்திட்டங்களுக்காக வரையறையின்றி நிதியளித்து வருவதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

பௌத்த தர்மத்தை அடிப்படையாகக் கொண்டே சிங்கள இனத்தவர்களுக்கு இடையிலான பலம்வாய்ந்த பிணைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

எனினும் கட்டுக்கதைகளை நம்பும் போது மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம் என்பன செல்லுபடியற்ற நூல்களாகி விடுகின்றன. அதன்பின்னர் வரலாறு பொய்யாகிப் போவதுடன் இந்த மண்ணின் மூத்த குடிகளான சிங்களவர்களுக்கு உள்ள உரிமையும் இல்லாது போகும்.


இந்தப் பிரிவினை செயற்பாடுகளுக்காகப் புத்தக அச்சிடுதல் உள்ளிட்ட பல திட்டங்கள் பாரிய நிதிச் செலவில் முன்னெடுக்கப் படுகின்றன.

கல்கிரியாகம பகுதியில் பல ஏக்கர் கணக்கில் ஹெலகம என்ற குடியேற்றம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதற்காக தமிழ் புலம்பெயர் அமைப்புகள் அதிகளவில் பணத்தைச் செலவு செய்துள்ளது.

இதனை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்பட வேண்டும் எனவும் சோபித்த தேரர் தெரிவித்துள்ளார். (நி-8)

# பிரதம நீதியரசராக

## முர்து நிரூபா சத்தியப்பிரமாணம்



(கொழும்பு)

இலங்கையின் புதிய பிரதம நீதியரசராக, உச்ச நீதிமன்ற நீதியரசர் முர்து நிரூபா பிதுஷினி பெர்னாண்டோ நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இலங்கையின் பிரதம நீதியரசர் பதவியை வகிக்கும் இரண்டாவது பெண்ணாகவும் இலங்கையின் 48 ஆவது பிரதம நீதியரசராகவும் முர்து பெர்னாண்டோ வரலாற்றில் இணைகிறார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சி தலைவராக ஜெய்ஷா பதவியேற்பு



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பி.சி.சி.ஐ.) பொதுச் செயலாளரும், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் மகனுமான ஜெய்ஷா சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


2019 ஒக்டோபர் முதல் பி.சி.சி.ஐ கௌரவ செயலாளராகவும் 2021 ஜனவரி முதல் ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் தலைவராகவும் பணியாற்றிய ஜெய்ஷா, நேற்று முன்தினம் முதல் ஐ.சி.சி. தலைவராக பொறுப்பேற்றார்.

முன்னதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) தலைவராக நியூசிலாந்தை சேர்ந்த கிரேக் பார்கிளே இருந்தார். 2020 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் திகதி அவர் அந்த பொறுப்பை ஏற்றார். நவம்பர் 30 ஆம் திகதியுடன் அவரது 4 ஆண்டு பதவிக்காலம் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து, ஐ.சி.சி தலைவராக ஜெய்ஷா போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஏற்கனவே இந்தியாவை சேர்ந்த ஜக்மோகன் டால் மியா. சரத் பவார். என்.சீனிவாசன், ஷசாங்க் மனோகர் போன்றவர்கள் ஐ.சி.சி. தலைமை பதவி வகித்தனர். அந்த வரிசையில் ஜெய்ஷாவும் இணைந்துள்ளார்.

குறிப்பாக 35 வயதான ஜெய்ஷா, மிக இளம் வயதில் ஐ.சி.சி. தலைவரானவர் என்ற சாதனையை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# ஆப்கானுக்கு எதிரான போட்டி சாருஜன் சதம் விளாசி அசத்தல்



19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையிலான போட்டியில் இலங்கை அணி 131 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

சார்காவில் நடைபெற்ற இந்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் டுகள் இழப் பிற்கு 243 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக சாருகன் சண்முகநாதன் 102 ஓட்டங்களை பெற்றார்.

இந்நிலையில் 244 ஓட்டங்கள் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 28.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் யாழினைச் சேர்ந்த நியூட்டன் ரஞ்சித்குமார்-2, குகதாஸ் மாதுளன்-1 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3268

### கஜானி




### மிதுளன்




### சியோன்




### விக்கி




### யதுஷா




### தர்ஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு

# இலவச மதிப்பெண்கள் வழங்க அமைச்சரவை பரிந்துரை

(கொழும்பு)

2024 ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய னைத்து மாண வர்களுக்கும் இலவசப் மதிப்பெண் வழங்குவதற்கு அமைச்சர்கள் சபை பரிந்துரைத் துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று உயர் நீதி மன்றத்திற்கு அறிவித் துள்ளார்.

இந்த வினாத்தாள் பரீட் சையை மீண்டும் நடத்துவது பொருத்த மற்றது என அமைச் சர்கள் சபை பரிந்துரைத் துள்ளதாகவும். இதனால் மாணவர்கள் பாதிக்கப் படலாம் எனவும் சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன உயர் நீதி மன்றத்தில் தெரிவித் துள்ளார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெளியானதாக கூறப் படும் மூன்று வினாக் களுக்கு முழு மதிப்பெண் வழ ங்க எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப் படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

முடிவடைந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் பகுதியில் மூன்று கேள்விகள் முன்னதாகவே வெளியிடப்பட்டதாக கூறப்படும் சம்பவம் காரணமாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட் டுள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மனுக்களை முழு உயர் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் விசாரிக்குமாறு கோரி சட்டமா அதிபர் மனுவொன்றை தாக்கல் செய் துள்ளதாகவும் சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

மனு மீதான விசாரணையை டிசம்பர் 11 ஆம் திகதி நடத்தவும் இதன் போது உத்தரவிடப் பட்டது. (நி-8)


பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு
கார்த்திகை 25 - மார்கழி 10
03 மார்கழி 2024
"பாதுகாப்பான அமைதியான சூழலில் வாழ்தல் என்பது பெண்களின் மாபெரும் சாதனைகளை வெளிக்கொணரும்."
JSAC 16 2024
(சி-1703)
யாழ். சமூக செயற்பாட்டு மையம்




## கேள்வி அறிவித்தல் திருத்தம்

பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2024

28.11.2024 ஆம் திகதிய பத்திரிகையில் 10 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் கேள்வி அறிவித்தல் நிபந்தனை இலக்கம் 04 ஆனது ஒருவர் பல கடைகளுக்கு விண்ணப்பிக்குமிடத்து சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு மிக பொருத்தமானது என கருதும் சித்திரகுத்தகைதாரருக்கு ஒருவருக்கு ஒருகடை மாத்திரமே சபையினால் வழங்கப்படும் என இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.

த. தர்சினி
செயலாளர்,பச்சிலைப்பள்ளி,
பிரதேசசபை, பளை.
03.12.2024
(சி-1706)


## இதய அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக எமது அணியின்
முகாமைத்துவப் பிரிவு நண்பியும் பிரதம
உள்ளகக் கணக்காய்வாளர்
மாவட்ட செயலகம், கிளிநொச்சி.
திருமதி குமுதினி நிறஞ்சன்
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர். **வேலுப்பிள்ளை சண்முகநாதன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினரின் துயரில் நாமும்
பங்குகொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்
யாழ். பல்கலைக்கழக 1995/96 அணி நண்பர்கள்

# சேதமடைந்த கொற்றாண்டர் குள வீதி புனரமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்படும் அபாயத்திலிருந்த கொற்றாண்டார் குளம் வீதி(மருதங்கேணி பளை சுனாமி அபாய வெளியேற்றபாதை) புனரமைக்கப் பட்டது.

பெரும் சேதத்துக்கு உள்ளாகவிருந்த நிலையில் குறித்த பாதையின் இரு பக்க மும் மண் மூடைகள் அடுக்கப் பட்டு குறித்த வீதி சீரமைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி திணைக்களம், பளை பிரதேசசபை மற்றும் பலாலி பாதுகாப்பு படை தரப்பினர் அடங்கிய குழுவினரின் ஒத்துழைப் புடன் குறித்த வீதி இவ்வாறு சீரமைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)


லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974
(559)


## இராசிபலன்

03.12.2024
கார்த்திகை 18, செவ்வாய்க்கிழமை
துதியை பிற்பகல் 1.23 மணிவரை
மூலம் பிற்பகல் 5.19 மணிவரை
சுபநேரம் -10.45-12.15 மணிவரை
இராகுகாலம் 3.15-4.45மணிவரை
சந்திராஷ்டமம் - கார்த்திகை, ரோகினி

வளவன்

**மேஷம்** வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், தேவைக்கு ஏற்ப பணம் வந்து சேரலாம், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்.

**கடகம்** பகையொன்று நட்பாகலாம், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பல நாட்களாக செய்ய நினைத்த வேலை ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.

**துலாம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சகோதர வழியில் எதிர்பார்த்த அனுகூலங்கள் கிடைக்கலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது,காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலைகள் உருவாகி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வார், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, எண்ணங்கள் எளிதில் கைகூடும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கூடும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**கும்பம்** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், பண வரவு எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்** விருந்தினர்கள் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்த கொள்வார், ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், கடன் சுமை குறையும் நாள், விரதம் வழிபாட்டில் நம்பிக்கை கூடும் நாள்.

**தனுசு** சோம்பலை விலக்குவது நல்லது, பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்** மற்வர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**பொறுமையை எங்கு கை விடுகின்றோமோ பலாத்காரம் உருவெடுக்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள அனர்த்தம் காரணமாக யாழில் 73,693 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 18 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையிலான காலப் பகுதியில் 697.4 மில்லி மீற்றர் மழை கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் அதனால் 21 ஆயிரத்து 987 குடும்பங்களைச் சேர்ந்த 73 ஆயிரத்து 693 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் யாழ் . மாவட்ட செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், எதிர்காலத்தில் இவ்வாறான வெள்ள அனர்த்தம் ஏற்படாதவாறு வடிகால் அமைப்புக்களை சீர் செய்யவும் , பொறிமுறைகளை உருவாக்கவும் அனைத்து திணைக்களங்களின் ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து இருக்கிறோம்.

மேலும் பிரதேச செயலக ரீதியாக எப்பகுதிகளில் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலை காணப்படுகிறது என்பதனை கண்டறிந்து அது தொடர்பிலான திணைக்களத்தினருடன் நேரடியாக அந்த இடங்களுக்கு விஜயம் செய்து ஆராய்ந்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானித்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் என தெரிவித்தார். (6-8-33)

# வவுனியாவில் வாள்வெட்டு சந்தேக நபரொருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா, சேமமடு, இளமருதங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வாளால் வெட்டி ஒருவரை கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஒருவர் ஓமந்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளமருதங்குளம் பகுதியில் பழைய பகை ஒன்றின் காரணமாக ஐந்து பேர் கொண்ட குழு வவுனியாவிலிருந்து இளமருதங்குளம் பகுதிக்குச் சென்று அங்கு வசிக்கும் 46 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரை வாளால் வெட்டி கொலை செய்திருந்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக கூமாங்குளத்தை சேர்ந்த வாகன உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை வவுனியா நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன், ஏனைய சந்தேக நபர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (6-8-250)


## சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம் நடத்தும் சர்வதேச மாற்றுத்திற னாளிகள் தினம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீன மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கருவி நிறுவனத்தின் தலைவர் க.சர்வானந்தா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை ஆசிரியர் செல்வராசா அட்ஜெயலிங்கம், சுன்னாகம் பொது சன நூலகர் திருமதி. சுதர்சன் ஜெயலக்சுமி, கௌரவ விருந்தினர்களாக கரவெட்டி, துன்னாலை அல்லையம்பதி மயூறா உணவு வழங்கல் சேவை உரிமையாளர் பால சுப்ரமணியம் ஜெயபாலன், யாழ். திருநெல்வேலி இளந் தளிர் பெற்றார் ஆதரவு குழுமம் திருமதி. சசிலதா ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6-8)

# வடக்கில் முதலீட்டாளர்கள் மன்றம் உருவாக்க நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் முதலீட்டாளர்கள் மன்றத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் யாழ் வணிகர் கழகப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

யாழ் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாணத்தில் முதலீட்டாளர்கள் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கக்கூடிய இடங்களை அடையாளப்படுத்திய பின்னர் வருடத்தில் ஒரு தடவையாவது முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினால் அனுகூலமான பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என வணிகர் கழகப் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஆளுநர் அதற்கான முன்னாயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# வட்ஸப் முடக்கம் முறைப்பாடுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் வட்ஸப் கணக்கு முடக்கம் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித் துள்ளதாக இலங்கை கணனி அவசர தயார்நிலைக் குழு தெரிவித்துள்ளது.கடந்த வாரங்களில் மாத்திரம் இது தொடர்பில் சுமார் 74 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக மூத்த தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருகா தமுனுபொல தெரிவித்தார். (நி-8)

# உப்புக்கேணி குளத்திற்கான வடிகாலமைப்பு வேண்டும்

## மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட கோவிற்குடியிருப்பு கிராமத்தில் உள்ள உப்புக்கேணிக் குளத்திற்கான நிரந்தர வடிகாலமைப்பை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் சாவகச்சேரி நகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் உப்புக் கேணிக்குளம் கடந்த 50வருட காலத்திற்கும் மேலாக எந்தவொரு புனரமைப்பும் இன்றிக்காணப்படுகிறது.

இதனால் மாரி காலத்தில் குளம் நிரம்பி உப்புக்கேணி வீதி மற்றும் அயலில் உள்ள குடிமனைகளை வெள்ள நீர் ஆக்கிரமிக்கும் துர்ப்பாக்கிய நிலைமை தொடர்ச்சியாக ஏற்படுகிறது.

குளமானது அணைக்கட்டு, எல்லைச்சுவர் என எதுவும் இன்றிக் காணப்படுவதால் மாரி காலத்தில் உப்புக்கேணி வீதியைப் பயன்படுத்துவோர் மற்றும் கால்நடைகள் தவறிக் குளத்திற்குள் விழக்கூடிய அபாய நிலை காணப்படுகிறது.

எனவே சாவகச்சேரி நகர சபை குளத்தினை புனரமைத்து அணைக்கட்டு அமைத்துப் பாதுகாப்புடன் மேலதிக நீர் வழிந்தோடக் கூடிய விதத்தில் நிரந்தர வடிகாலமைப்பையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8-30)

# வெள்ள நீருடன் பாம்புகள் உள்ளதால் வீடுகளுக்கு செல்ல முடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

வெள்ள அனர்த்தம் காரண மாக வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 20 அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ளனர். இவர்கள் சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, ஜே/57 கிராம சேவகர் பிரிவில் வசிப்பவர்கள் தமது வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ள நிலையில் பாம்புகள் உள்ளதால் வீடுகளுக்குள் செல்ல முடியாத நிலையில் இருப்பதாக கவலை தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினை ஒவ்வொரு வருடமும் இடம்பெறுவதாகவும் இதற்கு ஒரு தீர்வு வழங்கப்பட வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (6-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா:27 1/2<br>7இல் சூரிசெவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBA,Project Manager (pvt)<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம், சைவபோசனம்<br>தொ.இ: B/14955 | பிறப்பு: 1997-இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கிபா-10 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: College,BED, Teacher<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர்<br>தொ.இ: G/14991 |
| பிறப்பு:1997-இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்:6<br>தகைமை/தொழில்:BSC, Immigration Officer(netharland)<br>எதிர்பார்ப்பு-பட்டதாரி<br>தொ.இ: B/14956 | பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா-16 1/2 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:ACCA,Assistant Manager(pvt)<br>எதிர்பார்ப்பு: Engineer,ITField<br>தொ.இ: G/14993 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்- NCT Civil Engineer,TO<br>எதிர்பார்ப்பு: தகுதியானபெண்<br>தொ.இ: B/14957 | பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>8 இல்செவ்<br>கி.பா-51 உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர், வெளிநாடு<br>தொ.இ: G/14994 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக்கடைகள், சந்தைகள் ,சிற்றுண்டிச் சாலைகள், நடமாடும் கடைகள், மலசல கூட சுத்திகரிப்பு பணிகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி, கேள்வி அறிவித்தல் - 2025 (01.01.2025 - 31.12.2025)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,180.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 03.12.2024 - 16.12.2024 (மு.ப 9.00 - பி.ப.3.00மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 17.12.2024 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 17.12.2024 மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 17.12.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
4. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
5. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
6. குத்தகை தொடர்பான ஏனைய நிபந்தனைகள் நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிபந்தனையின் பிரதி தேவைப்படின் அலுவலக நேரத்தில் மாநகர சபை வளாகத்தில் உள்ள நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும் .
7. கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகைத்தொகையின் 1/3 வைப்புக்கட்டணத்தை 23.12.2024 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தப்படவேண்டும்

இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கடைகள் பல்பொருள் வாணிபக்கடைகள், சந்தைகள், சிற்றுண்டிச்சாலைகள், நடமாடும் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

| இல | இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் , பல்பொருள்வாணிபக்கடைகள், சந்தைகள் , சிற்றுண்டிச்சாலைகள், நடமாடும்கடைகள் விபரம் | கடை இல | பிணைப் பணம் | ஆரம்ப கேள்வித் தொகை(வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 57,100.00 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 510,000.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 515,000.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 120,000.00 |
| 5 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,601,700.00 |
| 6 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 140,000.00 |
| 7 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 1,001,150.00 |
| 8 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 705,887.02 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,781,250.00 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 712,200.00 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 325,000.00 |
| 12 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 565,250.00 |
| 13 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.05 | 5,000.00 | 207,965.08 |
| 14 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 261,345.00 |
| 15 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.07 | 5,000.00 | 146,225.45 |
| 16 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.08 | 5,000.00 | 130,075.66 |
| 17 | நாவாந்துறை பல்பொருள் வாணிபக்கடை | இல.09 | 5,000.00 | 144,470.75 |
| 18 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 523,000.00 |
| 19 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,400.01 |
| 20 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 496,300.00 |
| 21 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 434,355.00 |
| 22 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,002.00 |
| 23 | நாவாந்துறை மீன்சந்தை | | 10,000.00 | 668,000.00 |
| 24 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 90,000.00 |
| 25 | புங்கன்குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் அறிமுகச்சந்தை | | 2,000.00 | 6,564.56 |
| 26 | துரையப்பா விளையாட்டு அரங்கு சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 94,500.00 |
| 27 | நடமாடும் கடை - முத்திரைச்சந்தை இல 01 | | 20,000.00 | 181,100.00 |
| 28 | நடமாடும் கடை – பண்ணை மீன் சந்தை இல 01 | | 20,000.00 | 211,000.00 |
| 29 | நடமாடும் கடை – பண்ணை மீன் சந்தை இல 02 | | 20,000.00 | 211,000.00 |
| 30 | நடமாடும் கடை – நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 01 | | 20,000.00 | 211.100.00 |
| 31 | நடமாடும் கடை – நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 02 | | 20,000.00 | 190,000.00 |


மலசல கூடத்தொகுதிகளை சுத்திகரித்து பராமரிக்கும் சேவை கேள்வி அறிவித்தல்

| இல | விபரம் | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித் தொகை(வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | நவீன சந்தையில் அமைந்துள்ள மலசலகூடத்தொகுதிகளை சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | 1,000.00 | 24,000.00 |
| 2 | நல்லூர் சந்தைக்கட்டிடப் பகுதியில் அமைந்துள்ள மலசல கூடத்தொகுதிகளை சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | 1,000.00 | 12,000.00 |

மேலதிக தகவல்களை மாநகர சபையின் நானாவித இறை வரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 021 221 5978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகச் சமூகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,மாநகர சபை, யாழ்ப்பாணம்

# கொள்கைப் பிரகடனம் மீதான விவாதம் இன்று



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் முன் வைக்கப்பட்ட அரசாங்கத் தின் கொள்கைப் பிரகடனம் மீதான விவாதம் இன்றும் நாளையும் இடம் பெறவுள்ளது.

இன்று முதல் 6ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூட வுள்ளது. இந்தநிலையில் அண்மையில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான பிரேரணை பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வுள்ளது.

கொள்கைப் பிரகடனம் தொடர்பான பிரேரணை காலை 9.30 முதல் மாலை 5.30 வரை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பின்னர் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும் என பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அறிவித் துள்ளது. ( நி-8)

# அரசியலில் இருந்து இடை விலகும் பந்துல



(கொழும்பு)

தாம் அரசியலிலிருந்து இடைவேளையைப் பெற்றுக் கொள்ள வுள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.மூன்றில் இரண்டு அறுதிப் பெரும்பான்மையை வழங்கி புதிய கொள்கைகளைக் கொண்ட அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை வழங்கப்பட் டுள்ளது. நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் தங்களிடம் உள்ளதாக அரசாங்கம் உறுதி யளித்துள்ளது. அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு ஜனநாயக ரீதியில் இடமளிக்க வேண்டும் என்பது எமது பொறுப்பாகும்.

இந்தநிலையில் எந்தவொரு அரசியல் நடவடிக் கைகளிலும் தாம் ஈடுபடப்போவதில்லை. அத்துடன் நான் எந்தவொரு அரசியல் கட்சியிலும் அங்கம் வகிக்க வில்லை.ஒரு கலாநிதி பட்டப்படிப்பை மேற் கொள்வதற் காக எதிர்வரும் 3ஆம் திகதி நாட்டிலிருந்து வெளியேற வுள்ளேன். ஆகையால் அரசியலிலிருந்து தற்காலிக இடைவேளை ஒன்றைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித் துள்ளார். (நி-8)

## மின்சாரக் கட்டணம்

# மூன்று ஆண்டுகளுக்குள் 30 சதவீதம் குறைக்கப்படும்

### அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி நாட்டிற்கு வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் 30 வீதத்திற்கும் அதிகமான மின்சார கட்டணங்க்ள் குறைக்கப்படும் என அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் பண்டிகை காலத்திற்காக பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கடந்த மாதத்தில் இருந்து குளிர் காலம் தொடங்கியது.


இதனைத் தொடர்ந்து அங்கு கடுமையான பனிப் பொழிவு நிகழ்ந்து வருகிறது. குறிப்பாக அந்த நாட்டின் மேற்கு மாகாணங்களான வோஷிங்டன், பென்சில்வேனியா உள்ளிட்டவற்றில் வழக்கத்தை விடவும் அதிகமாக குளிர் வீசி பனிப்பொழிவு அதிகரித்து காணப்படுகிறது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கு பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டன. பனித்துகள்கள் சாலை மற்றும் ரயில் தண்டவாளங்களை மூடியதால் பொது போக்குவரத்து ரத்து செய்யப்பட்டது.

இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இந்த நிலையில் வோஷிங்டன், ஒகியோ, மிச்சிகன் உள்ளிட்டவற்றில் 61 செ.மீ அளவுக்கு பனிப்பொழிவு நிகழ்ந்துள்ளது.

அதிகபட்சமாக பென்சில்வேனியாவில் வடமேற்கு நகரங்களில் 73 செ.மீ வரை பனிப்பொழிவு ஏற்பட்டதாக அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. (நி-8)

# ஒரேஷ்னிக் ...
# கலங்கும் ...



**(மொஸ்கோ)** — **சர்வதேசத்தை அ... தியுள்ள ஒரேஷ்... அமைப்பின் உற்பத்... உள்ளதாக ரஷ்... விளாடிமிர் புடி... ளார்.**

இந்நிலையில் புடினின் இந்த அறிவிப்பானது யுத்தம் தொடர்பில் உக்ரைன், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கவலையை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் உலகிலேயே ஆபத்தான ஆயுதம் என கூறப்படும் ஒரேஷ்னிக் ஹைப்பர்சோனிக் ஏவுகணையின் புதிய விபரங்கள் வெளிவந்துள்ளன.

குறித்த ஏவுகணையானது, ஒலியின் வேகத்தை விடவும் 10 மடங்கு வேகத்தில் (மாக் 10) 12,348 கிமீ/மணிக்கு செல்லக் கூடியது.

அத்தோடு சூரியனின் மேற்பரப்பில் உள்ள வெப்பத்தை போல், இந்த ஏவுகணை தாக்கும் இடத்தில் இரும்பு உருகவைக்கும் அளவிற்கு 4,000°C வெப்பத்தை உருவாக்கும் என கூறப்படுகிறது.

# நீதித்துறையே கருச்சிதைவு செய்யப்பட்டுள்ளது

## ஜோ பைடனை விமர்சித்த ட்ரம்ப்



(வோஷிங்டன்)

நவம்பர் 5 ஆம் திகதி நடந்து முடிந்த அமிரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளர் ஜோ பைடன் கமலா ஹாரிஸை தோற்கடித்து முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் வெற்றி பெற்றார். அடுத்த ஜனவரியுடன் ஜோ பைடன் பதவிக்காலம் முடிவடைகிறது.

பதவியேற்கும் முன்பே ட்ரம்ப் முக்கிய முடிவுகளை அறிவித்து வருகிறார். இதற்கிடையே பதவியில் இருந்து வெளியேறும் ஜோ பைடனும் கடைசியாக தனது அதிகாரத்தை பயன்படுத்தி முக்கிய முடிவுகளை செயற்படுத்தி வருகிறார்.

ரஷ்யா மீது பாலிஸ்டிக் ஏவுகணைகளைப் பயன்படுத்த உக்ரைனுக்கு அனுமதி வழங்கி ஜோ பைடன் திடீர் அதிரடி காட்டினார். இந்நிலையில் கிரிமினல் வழக்கில் சிக்கியுள்ள தனது மகன் ஹண்டர் பைடனுக்கு ஜோ பைடன் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

ஜோ பைடனின் மூத்த மகனான ஹண்டர் பைடன் (54 வயது) சட்டவிரோதமாக துப்பாக்கி வாங்கி வைத்திருந்த வழக்கிலும் பத்து ஆண்டுகளில் சுமார் 1.4 மில்லியன் டொலர்கள் வரி ஏய்ப்பு செய்த வழக்கிலும் சிக்கியுள்ளார்.

இதற்கிடையே தனது போதைப் பழக்கத்தில் இருந்தும் அவர் மீண்டு வருகிறார்.

அமெரிக்காவில் ஜனாதிபதியாக இருக்கும் ஒருவர் பொது மன்னிப்பு மூலம் குற்ற வழக்குகளில் சிக்கிய நபரின் சிறைத் தண்டனையை ரத்து செய்ய முடியும். ஆனால் தனது மகனுக்கு அவ்வாறு மன்னிப்பு வழங்கமாட்டேன் என ஜோ பைடன் கூறி வந்த நிலையில், தற்போது அதற்கு மாறாக ஹண்டர் பைடனுக்கு தனது அதிகாரத்தை பயன்படுத்தி பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

இதுதொடர்பாக வெள்ளை மாளிகை நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில், இன்று, என் மகன் ஹண்டருக்கு பொது மன்னிப்பு வழங்கி கையெழுத்திட்டேன். நான் பதவியேற்றபோது நீதித்துறையின் முடிவுகளில் தலையிட மாட்டேன் என்று கூறியிருந்தேன். அதை இதுநாள் வரை காப்பாற்றி வந்துள்ளேன்.

என் மகன் மீதான விசாரணை நியாயமற்ற முறையில் நடந்த போதும் நான் என் வார்த்தையைக் காப்பாற்றினேன்.

ஆனால் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக என் மகன் என்ற ஒரே காரணத்தால் ஹண்டர் மீது விசாரணை நடந்துள்ளது. என் மகனை வைத்து எனது செயற்பாடுகளை நிறுத்த முயற்சி நடந்தது. எனவே தற்போது மன்னிப்பு வழங்கியுள்ளேன் என்று பைடன் குறிப்பிட்டுள்ளார்.

தனது மகன் சிறைக்குச் செல்வதிலிருந்து ஜோ பைடன் காப்பாற்றி உள்ள நிலையில், அடுத்து ஜனாதிபதியாகப்போகும் ட்ரம்ப் இதை விமர்சித்துள்ளார். நீதித்துறையே கருச்சிதைவு செய்யப்பட்டுள்ளதாக ட்ரம்ப் தெரிவித்தார்.

மேலும் ஹண்டருக்கு பொது மன்னிப்பு வழங்கியதுபோல் 2021 இல் ட்ரம்ப் ஆட்சியை இழந்த போது வெள்ளை மாளிகை பகுதியில் போராட்டம் நடத்தி தற்போது சிறையில் இருக்கும் தனது ஆதரவாளர்களுக்கும் சேர்த்து பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ட்ரம்ப் பல்வேறு வழக்குகளில் சிக்கியுள்ள நிலையில் பதவியேற்றதும் தனக்குத் தானே பொது மன்னிப்பு வழங்கிக்கொள்வார் என்ற கருத்தும் நிலவுவது குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவுகணை ...ர்வதேசம்!

அச்சத்தில் ஆழ்த் ...ஷ்னிக் ஏவுகணை ...த்தியை அதிகரிக்க ...ஷ்ய ஜனாதிபதி ...ன் அறிவித்துள்



மேலும் ஒரேஷ்னிக் ஏவுகணை 5,000 கிமீ வரை தாக் கும் திறன் கொண்டுள்ளதுடன் அணு ஆயுதங்களுடன் பயணிக்கக் கூடிய வகையிலும் அமைந்திருக்கும் என்றும் தெரியவருகிறது.

மேலும் இது அணு ஆயுதம் இல்லாமல் தாக்கினாலும் அணு தாக்குதலுக்கான விளைவுகளை இந்த ஏவுகணை உருவாக்கும்.

இந்த நிலையில் அதன் வேகமும் திடமான தாக்குதலின் காரணமாகவும் எந்த ஒரு அமைப்பினாலும் இதனைத் தடுக்க முடியாது என்றே புடின் தெரிவித்துள்ளார்.

புடின், ரஷ்யாவின் பாதுகாப்புக்காக எந்த எல்லைக்கும் செல்வோம் என எச்சரித்துள்ள நிலையில் இது அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. (நி-8)

## வடகொரியா எப்போதும் ரஷ்யாவிற்கு ஆதரவளிக்கும்

### உறுதிபடத் தெரிவித்தார் கிம்



(பியாங்யாங்)

நேட்டோ கூட்டணியில் இணைய முயன்ற உக்ரைன் மீது ரஷ்யா 2022 ஆம் ஆண்டு போர் தொடுத்தது. இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் செயற்படுகின்றன. அவை ஆயுத உதவி, பொருளாதார உதவிகளை உக்ரைனுக்கு வழங்குகின்றன.

அதேபோல் ரஷ்யாவுக்கு அதன் நட்பு நாடான வடகொரியா ஆதரவாக உள்ளது. அதன்படி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களை ரஷ்யாவுக்கு வடகொரியா அனுப்பியது.

இரு நாடுகளுக்கிடையே கடுமையான போர் நிலவுவதால், 3 ஆம் உலகப் போர் ஏற்படும் அபாயம் இருப்பதாக ஐ.நா. சபை மற்றும் பல நாடுகள் கவலை தெரிவித்தன. இந்த நிலையில் ரஷ்ய இராணுவ மந்திரி ஆண்ட்ரே பெலோசோவ் தலைமையிலான குழுவினர் வடகொரியா சென்று அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன்னை சந்தித்து பேசினர்.

அப்போது கிம் ஜாங் உன் கூறியதாவது, நேட்டோ கூட்டமைப்பின் பொறுப்பற்ற செயலுக்கு பதிலடி நடவடிக்கையே இந்த போர் ஆகும். எனவே உக்ரைனுக்கு எதிரான போரில் வடகொரியா எப்போதும் ரஷ்யாவுக்கு தனது ஆதரவை அளிக்கும் என அவர் தெரிவித்தார். (நி-8)

## சர்ச்சைக்குரிய தீர்ப்பால் கலவர பூமியான மைதானம்

### 100 ரசிகர்கள் உயிரிழப்பு





(என்சரிகோர்)

கினியா நாட்டில் நடந்த ...ள்ளூர் கால்பந்து போட்டி ...ல் நடுவரின் தவறான தீர் ...க்கு எதிர்ப்பு தெரிவித்த ஒரு ...ரப்பு ரசிகர்கள் மைதான ...தை ஆக்கிரமித்தனர். இத ...னயடுத்து மற்றொரு தரப் ...னரும் மைதானத்திற்குள் ...ந்து ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். இதில் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவின் 2 ஆவது பெரிய நகரம் என்சரிகோர். இங்கு நேற்று முன்தினம் உள்ளூர் கால்பந்து போட்டி ஒன்று நடைபெற்றது. இதனை ஆயிரத்திற்கு மேற்பட்ட ரசிகர்கள் ஒன்றுக்கூடி கண்டுகளித்தனர். போட்டியில் நடுவர் தவறான தீர்ப்பு வழங்கியதாகக் கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த ஒரு தரப்பு ரசிகர்கள் ஆவேசத்தில் ஆர்பரித்ததுடன் கால்பந்து மைதானத்திற்குள் நுழைந்தனர். இதனைக் கண்ட எதிர் தரப்பு ரசிகர்களும் மைதானத்திற்குள் புகுந்தனர். இதனால் இரு தரப்பு ரசிகர்களும் பலமாக மோதிக் கொண்டனர்.

இந்த மோதல் கலவரமாக மாறியது. மைதானத்திற்குள் வெளியேயும் சாலைகளிலும் சண்டையிட்டுக் கொண்ட ரசிகர்களால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர். மைதானம் அருகே உள்ள பொலிஸ் நிலையத்திற்கும் தீ வைக்கப்பட்டது. இந்த வன்முறை சம்பவத்தால் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக வைத்தியர் ஒருவர் தெரிவிக்கையில், மருத்துவமனையில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை உடல்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. பிணவறையும் நிரம்பியுள்ளது. இந்த கலவரத்தில் சுமார் 100 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிப் போக்குவரத்தை கண்காணிக்க ட்ரோன்கள்

## மீண்டும் களமிறக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிப்பு

**(கொழும்பு) — வீதிகளில் வாகன போக்குவரத்தை கண்காணிக்க மீண்டும் ட்ரோன் கமராக்கள் பயன்படுத்தப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.**



அந்தவகையில், கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப் படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 300 | 400-500 | 350 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 600 | 300-350 | 300 |
| தக்காளி | 550 | 600 | 400 | 450 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 220 | 100-150 | 150 |
| கோவா | 300 | 300 | 250 | 280 | 400 |
| கரட் | 250 | 280 | 300 | 260 | 320 |
| பூசணி | 140 | 120 | 150 | 120 | 200 |
| புடோல் | 200 | 300 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 100 | 80 | 150 | 60 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 240 | 300 | -- | 400 |
| பாகற்காய் | 600 | 1400 | 1000 | 800 | 2000 |
| வெண்டக்காய் | 300 | 220 | 200 | 300-380 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 180 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 600 | 600 | 700-850 | 1000 |
| லீக்ஸ் | 300 | 400 | 300 | 270 | 400 |
| பீற்றூட் | 200 | 250 | 250 | 300 | -- |
| கறிமிளகாய் | 800 | 900 | 800 | 560 | 1000 |
| முருங்கைக்காய் | 600 | -- | 1000 | -- | 600 |
| போஞ்சி | 500 | 700 | 600 | 460 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 150 | 150-200 | 200 |
| தேசிக்காய் | 600 | 450 | 700 | 400-450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 180 | 150 | 80-165 | 150-200 |
| இராசவள்ளி | -- | 900 | 1000 | 650 | 1200 |
| வெங்காயப்பூ | -- | 450 | 600 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 140 | 200 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 60 |
| வல்லாரை | 80 | 36 | 80 | 110 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 90 | 150 |

# இன்று ஒரு தகவல் 276



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## குழந்தையின் கூச்சம்!

சார் ஒரு இலக்கியக் கூட்டம் ஏற்பாடு செய்திருக்கின்றோம். நீங்கள் அவசியம் வந்து அதிலே பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் ஒருவர். வேண்டாம் பலபேருக்கு முன்னால் வந்து நிற்பது என்றால் எனக்கு மிகவும் கூச்சமாக இருக்கும்.

என்ன சார் இது. இன்னும் குழந்தை மாதிரி கூச்சப்படுகின்றீர்களே என்றார் அவர். அவரை ஒரு மாதிரி சமாளித்து அனுப்பி வைத்து விட்டு அதற்கு பின் அதைப்பற்றி யோசித்து பார்த்தேன். சில நிபுணர்கள் எழுதியிருப்பதை படித்தும் பார்த்தேன்.

மனோ தத்துவ நிபுணர்கள் என்ன சொல்கின்றார்கள் தெரியுமா? 10 தொடக்கம் 20 சதவீதம் குழந்தைகள் பிறக்கின்ற போதே கூச்ச சுபாவம் கொண்டதாகத் தான் இருக்கின்றதாம்.

ஒரு தாத்தா தன்னுடைய பேரப்பிள்ளையை ஆசையாகக் கூப்பிடுகின்றார் விளையாட்டுக் காட்ட. அது அழுதுகொண்டே ஓடிப்போகின்றது. ஒரு அம்மா தன்னுடைய பிள்ளையை பாடசாலையிலே சேர்ப்பதற்காக கூட்டிக்கொண்டு போகின்றார். இந்தப் பிள்ளை அம்மாவினுடைய முந்தானையிலே ஒழிந்து கொண்டு வெளியே வரமாட்டேன் என்றது.

இவர்களை எல்லாம் எப்படி சமாளிக்கிறது? குழந்தைகளினுடைய கூச்ச சுபாவத்தை போக்குவது எப்படி? இதற்கு நிபுணர்கள் சில யோசனைகளைச் சொல்லியிருக்கின்றார்கள்.

மற்றவர்களுக்கு முன்னாலே என் பையனுக்கு கூச்சம் கொஞ்சம் அதிகம் சார். மற்றவர்கள் பார்த்தால் அதிகமாக வெட்கப்படுகிறார் சார். இப்படி சொல்கின்ற அப்பாக்கள் உண்டு. என் பையன் புதிய மனிதர்களைக் கண்டால் அட்டை போன்று ஒட்டிக்கொள்வான் சார் இப்படி சொல்கின்ற அப்பாக்களும் உண்டு. இப்படியெல்லாம் குழந்தைகளுக்கு முத்திரை குத்திக் கொள்வது தவறு.

புதிதாக யாராவது வீட்டிற்கு வந்தால் குழ்ந்தை தானாக தன்னுடைய கூச்சத்தையும் பயத்தையும் போக்கிவிட்டு சகஜமாக பழகிக் கொள்வதற்கு வாய்ப்புக் கொடுங்கள். ஒரு கூட்டத்திற்கோ அல்லது சொந்தக்காரர் திருமணத்திற்கோ குழந்தையை அழைத்துக் கொண்டு போகின்றீர்கள். அங்கே போய் கட்டாயப்படுத்தி குழந்தையை மற்றவர்களிடம் பேசச் சொல்லாதீர்கள்.

சில சமயம் குழந்தை தானாக கூச்சசுபாவத்தை விட்டு பேசுவதற்கு முன் வந்தால் அதைப் பாராட்டுங்கள். குழந்தைகள் கலகலப்பில்லாமல் மௌனமாக இருந்தால் அதையும் கண்டு கொள்ளாதீர்கள். குழந்தைகள் பேச ஆரம்பித்தால் அதை ஆர்வத்தோடு கவனிக்க தெரிய வேண்டும். கலந்துரையாடுகின்ற பழக்கத்தை வீட்டிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். கேட்டதற்கு பதில் சொல் என்று நீங்கள் அதிகாரம் செய்து கொண்டிருந்தால் குழந்தைகள் பேசுகின்ற சந்தர்ப்பம் குறைந்து விடும்.

கேலி செய்கின்ற பழக்கம் குழந்தைகளை மிகவும் பாதிக்கும். பெரியவர்கள் ஆனதற்குப்பின் சில பேர் கூச்சத்தோடும் பயத்தோடும் இருப்பதற்கு இது தான் காரணம். சின்ன வயதிலே அவர்களெல்லாம் ஏதாவது கேலிக்கு உள்ளாகியிருப்பார்கள்.

இரண்டாவது குழந்தை மூத்த குழந்தையைக் கேலி செய்யும் போது அது இளம் நெஞ்சங்களை விட்டு நீங்குவதே இல்லையாம். எப்போதும் குழந்தையினுடைய நடை உடை பாவனைகளை பற்றி சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். அதுவே கூச்ச சுபாவத்தினை கொண்டு வந்து விடும்.

அப்பா எங்கே போயிருக்கின்றார்? என்று யாராவது கேட்டால் இது மாதிரி இந்தக் காரியத்திற்காக வெளியே போயிருக்கின்றார். இத்தனை மணிக்கு வந்து விடுவார் என்று சொல்கின்ற அளவுக்கு குழந்தைகளைப் பழக்கப்படுத்தி வைத்திருக்க வேண்டும். தொலைபேசியிலே யாராவது விசாரித்தால் கூட இது மாதிரி பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லிக் கொடுக்க வேண்டும்.

சின்னச்சின்ன கூட்டங்களிலே நான்கு வார்த்தை பேச தயார் செய்யலாம். ஒரு கடையிலோ அல்லது ஒரு ஹோட்டலிலே ஏதாவது விபரம் கேட்க வேண்டும் என்றால் உங்கள் குழந்தையை தைரியமாக அனுப்புங்கள். குழந்தைகள் பணிவாகவும் பொறுமையாகவும் கேட்கின்ற போது கூச்ச சுபாவம் குறையும். சின்ன வயதிலே இப்படி பழக்கப்படுத்தினால் தான் வருங்காலத்திலே தைரியமாக இந்த சமுதாயத்திலே வாழ முடியும். இல்லை என்றால் அறுபது வயதிலேயும் அடுப்பங்கரையை விட்டு வெளியே வருவதற்கு கூச்சப்பட்டுக் கொண்டு இருக்க வேண்டும்.

இந்தக் காலத்து பிள்ளைகள் எவ்வளவோ பரவாயில்லை. எதற்கும் தயங்குவதில்லை. கூச்சப்படுவதில்லை. ஒரு அம்மா அடுப்பங்கரையிலிருந்து சத்தம் போட்டார். டேய் ராமு தயவு செய்து அந்த டீவியை நிறுத்துடா! அந்தப் பெண்ணுடைய குரல் மகாமோசம். அடுப்பங்கரையிலே இருக்கின்ற என்னாலேயே சகித்துக் கொள்ள முடியவில்லை என்றார்.

உடனே பையன் கொஞ்சம்கூடத் தயங்காமல் பதில் சொன்னான். அம்மா இந்தக் குரல் டீவியிலிருந்து வரவில்லை. எதிர் வீட்டு அம்மா இங்கே வந்திருக்கின்றார். அவர் தான் இப்போது என்னுடன் பேசிக்கொண்டிருக்கின்றார் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள நீரில் பரவும் எலிக்காய்ச்சல் மக்கள் அவதானம்

## வைத்தியர் வினோதன்

(கிளிநொச்சி)

வெள்ள அனர்த்தத்தின் பின்பு எலிக்காய்ச்சல் பரவும் ஆபத்து உள்ளதால் மக்கள் விழிப்பாக செயற்படுமாறு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், அண்மை நாட்களாக இடம் பெற்ற வெள்ள அனர்த்தத் தினால் பெருமளவானோர் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தனர்.

வெள்ளநீர் மூலம் எலியின் சிறுநீர் மூலம் பக்ரீறியா தொற்று ஏற்பட்டு குறித்த நோய் ஏற்படுகிறது. பெரும்பாலானோர் வெள்ள அனர்த்தம் காரணமாக வெள்ள நீரில் பயணம் செய்திருந்தனர்.

எனவே கடுமையான காய்ச்சல் மற்றும் கால் நோ, கண்சிவப்பு போன்ற அறிகுறி காணப்பட்டால் மருத்துவ உதவியைப்பெற்று எலிக்காய்ச்சலிருந்து பாதுகாக்குமாறு தெரிவித்திருந்தார். (6-8-316)

# நெற் பயிர்களில் மடிச்சுக்கட்டி நோய் தாக்கம்

## விவசாயிகள் கவலை

(தருமபுரம்)

**சீரற்ற காலநிலையைத்தொடர்ந்து நெல் வயல்களில் மடிச்சுக்கட்டி நோய்த்தாக்கம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.**




கிளிநொச்சி மாவட்டத்தில் 2024ஆம் ஆண்டு கால போக நெற்செய்கை குளங்களின் கீழான நெற்செய்கை மற்றும் மானவாரி நெற்செய்கையாக மாவட்டத்தில் 70 000 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் நிலவிய சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டி நோயின் தாக்கம் அதிகரித்துள்ளமையால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி புளியம் பொக்கணை கமநலசேவை நிலையத்தின் கீழ் 30 000இற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொளப்பட்டு வருகின்ற நிலையில் மடிச்சுக்கட்டி நோயினால் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.


ஒரு போகத்தை மட்டும் வாழ்வாதாரமாகவும் உணவுத் தேவைக்காகவும் நெற்செய்கை மேற்கொள்கின்ற நிலையில் அதிகரித்த நோய்த் தாக்கம் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த போகங்களிலும் தாம் நஷ்டத்தை எதிர்கொண்டதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். எனவே உரிய அதிகாரிகள் குறித்த நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8-316)

# கிளிநொச்சிசாலை இ.போ.ச ஊழியர்கள் பகிஷ்கரிப்பு



(கிளிநொச்சி)

இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலை ஊழியர்கள் நேற்று பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.



நிர்வாகத்தில் இடம்பெறும் பிரச்சினைகளைத் தீர்க்க வலியுறுத்தி இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலை ஊழியர்கள் குறித்த பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சாலையில் இடம்பெறும் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகளை உயரதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்காமையால் தாம் பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக ஊழியர்கள் தெரிவித்தனர். இந் நிலையில் இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலை செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை டிப்போ நுழைவாயில் கதவுகளில் அதிகாரப் பிரயோகம் நிறைந்த முகாமையாளரே உடனே வெளியேறு, ஊழல் செய்யும் சாலை முகாமையாளரை வெளியேற்று போன்ற பதாகைகள் காட்சிப் படுத்தப்பட்டு இருந்தன.

(6-8-271-316)

# முல்லையில் 23,930 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில்

## இழப்பீடுகளை வழங்குமாறு கோரிக்கை

(நெளுக்குளம்)

முல்லைத்தீவுமாவட்டத்தில் 23,930ஏக்கர் பெரும்போக நெற்செய்கை கனமழை காரணமாக வெள்ளநீரில் மூழ்கிக் காணப்படுவதாக முல்லைத் தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.பரணீகரன் தெரிவித்துள்ளார்.

மாவட்டசெயலகத்தில் இடம் பெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார். மேலும் வயல் நிலங்களில் தொடர்ந்தும் வெள்ள நீர் தேங்கியிருக்கின்றதா என்பதை அவதானித்தே, பாதிப்பு நிலைமைகள் குறித்து மதிப்பீடு செய்ய முடியும்.

தற்போது மழைவீழ்ச்சி அளவு குறைந்திருப்பதால் வயல்நிலங்களை மூடியிருக்கின்ற வெள்ள நீர் படிப்படியாக குறைவடைகின்றபோது, தற்போது எதிர்பார்க்கப்படுகின்ற பாதிப்பு நிலைமையை விட, பாதிப்பு நிலைமைகள் குறையக் கூடுமெனத் தெரிவித்தார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில், விவசாய பாதிப்பு நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்கு குறிப்பிட்டளவு நாட்கள் தேவை என திணைக்கள அதிகாரிகள் கூறுவதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

ஆனால் கூடிய விரைவில் விவசாய பாதிப்பு நிலைமைகளை மதிப்பீடுசெய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடுகளை உடனடியாக வழங்க உரிய திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனத் தெரிவித்தார். (6-8-299)

# இலங்கை காப்புறுதி சங்கத்தின் 15 ஆவது தேசியப் பேரவையின் மாநாடு

(கொழும்பு)

இலங்கை காப்புறுதி சங்கம் (IASL) ஆயுள் காப்புறுதி ஆலோசகர்களின் 15 ஆவது தேசிய பேரவையின் மாநாடு (NAFLIA) இன்று செவ்வாய்க் கிழமை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டையில் அமைந்துள்ள Monarch Imperial இல் இடம்பெற்றுள்ளது.

இவ்வாண்டு மாநாட்டின் கருப்பொருள் "காப்புறுதியின் மூலம் வாழ்க்கையை மாற்றுதல்" என்பதாகும். ஆயுள் காப்புறுதி வல்லுநர்கள், ஆலோசகர்கள், தொழிற்துறைத் தலைவர்கள் இணைந்து காப்புறுதியின் மூலம் மக்களின் வாழ்க்கையை எப்படி வளமாக மாற்றுவது என்பதைப் பற்றி இந் நிகழ்வில் ஆராயவுள்ளனர்.

இம் மாநாட்டின் மூலம் NAFLIA - 2024 இன் நோக்கம் யாதெனில், காப்புறுதித்துறை வல்லுநர்களை ஊக்குவித்து அவர்களின் மூலம் சமூகத்தினதும், தனி மனிதர் களினதும் வாழ்க்கையைப் பாதுகாத்து, மேம்படுத்தி, வளமான மாற்றங்களை ஏற்படுத்தல் ஆகும்.

முதல்அமர்வில் பார்வையாளர்களுக்கான பல அறிவுப் பகிர்வு நிகழ்வுகள் இடம்பெறும். இரண்டாவது அமர்வில் ஆயுள் காப்புறுதித் துறையின் மதிப்புமிக்க 2023 ஆம் ஆண்டுக் கான விற்பனை விருதுகள் வழங்கப் படும். இச் சிறப்பு விருது வழங்கும் விழாவானது ஆயுள் காப்புறுதித் துறையில் செயற்திறன் மிக்க சாதனையாளர்களை கௌரவித்துக் கொண்டாடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# அனுமதிப் பத்திரம் இன்றி கால்நடைகளை ஏற்றிச் சென்ற

## 4பேர் கைது 12 கால்நடைகள் மீட்பு

(தருமபுரம்)

புளியம்பொக்கணை பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி லொறி மற்றும் உழவு இயந்திரம் மூலம் கொண்டு செல்ல முற்பட்ட 12 கால்நடைகளை மீட்டதுடன் ஏற்றிச் சென்ற நான்கு பேர் தருமபுர பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கால்நடை உரிமையாளரின் விற்பனை செய்வதற்கான கடிதம், கால்நடைகளைக் கொண்டு செல்வதற்காக கால்நடை வைத்தியரின் சிபாரிசுக் கடிதம் மற்றும் கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கான வாகனத்தில் தண்ணீர், உணவு என்பன வற்றை ஏற்படுத்திக் கொடுக் காமல் கொண்டு செல்லப்பட்ட குற்றச்சாட்டில் நான்கு சந்தேக நபர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நால்வரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார்.

(6-8-316)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 646





வானதியைப் பற்றி இளைய பிராட்டி கூறியது நினைவு வந்தது. நாலுபுறமும் அபாயங்கள் சூழ்ந்த இக்காலத்தில் கொடும்பாளூர் இளவரசி தனியாக எங்கே புறப்பட்டாள்? தகுந்த பாதுகாப்புக்கூட இல்லையே? அதோடு இன்னொரு விசித்திரத்தையும் அவன் கண்டான். சற்றுத் தூரத்திலிருந்து பயங்கரத்தோற்றமுடைய இரண்டு காலாமுக சைவர்கள் வானதியின் பல்லக்கை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் எதற்கு அப்படிப் பார்க்கிறார்கள்? அவர்கள் இரண்டு பேரும் யார்? அரிச்சந்திர நதிக் கரையில் தான் படுத்துறங்கிய போது தன் பக்கத்தில் வந்து- நின்று பேசியவர்கள் அல்லவா?

வானதியிடம் வந்தியத்தேவனுக்கு அவ்வளவு அனுதாபம் இல்லையென்பது உண்மையே. பொன்னியின் செல்வருடைய உள்ளத்தில் பூங்குழலி பெறவேண்டிய இடத்தை வானதி அபகரிக்க விரும்புவதாகவே அவன் எண்ணினான். இதனால் அவள் பேரில் கோபங் கொண்டிருந்தான். ஆனாலும் இளைய பிராட்டி அவளிடம் அளவற்ற அன்பு வைத்திருந்தாள் என்பதை அவனால் மறக்க முடியவில்லை. எனவே வானதிக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்தால் இளைய பிராட்டி அதனால் அளவில்லாத துன்பம் அடைவாள். ஆனால் அபாயம் எதற்காக நேர வேண்டும்? "சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிட்டுக் கொள்ளாதே. உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு போ!' என்று ஆழ்வார்க்கடியான் கூறிய புத்திமதி நியாயமானதுதான். ஆயினும் வானதியின் பல்லக்குச் சென்றதைக் காலாமுகர்கள் இருவர் மறைவான இடத்திலிருந்து பார்த்துக் கொண்டு நின்ற காட்சி திரும்பத் திரும்ப அவன் ஞாபகத்திற்கு வந்து கொண்டிருந்தது.

இதோ குடந்தை சோதிடரின் வீடு வந்துவிட்டது! எல்லாவற்றுக்கும் அவரைக் கேட்டுப் பார்க்கலாம் அடடே! இத்தனை நேரம் அந்த விடயம் மூளைக்கு எட்டவில்லையே! வானதி தேவியும் குடந்தைச் சோதிடரின் வீட்டுக்குத்தான் வருகிறாள் போலும். பழம் நழுவிப் பாலில் விழுந்தது. வானதி வந்து சேர்வதற்குள் நம்முடைய காரியத்தையும் நாம் பார்த்துக் கொள்ளலாம். இவ்வாறு எண்ணிச் சோதிடர் வீட்டு வாசலில் குதிரையை நிறுத்தி விட்டு வந்தியத்தேவன் அந்தச் சிறிய வீட்டுக்குள் நுழைந்தான்.

## 32 ஆம் அத்தியாயம்
## பிரம்மாவின் தலை

வந்தியத்தேவன் குடந்தை சோதிடரின் வீட்டிற்குள் இரண்டாம் முறையாகப் பிரவேசித்தபோது அவனுடைய உள்ளத்தில் ஓர் அதிசயமான இன்ப உணர்ச்சி உண்டாயிற்று. அந்தச் சிறிய வீட்டுக்குள்ளேதான் முதன் முதலாக அவன் இளையபிராட்டி குந்தவையைப் பார்த்தான். அவளுடைய செந்தாமரை வதனத்தையும், வியப்பினால் விரிந்த கரிய பெரிய கண்களையும் பார்த்துத் திகைத்து நின்றான். அவளுடைய தேனினுமினிய தீங்குரல் அவன் செவியில் விழுந்ததும் அங்கேதான். இந்த நினைவுகள் எல்லாம் அலை மோதிக் கொண்டு அவன் உள்ளத்தில் பொங்கி வந்தன. அவற்றினால் அவன் செவிகள் இனித்தன. உள்ளம் இனித்தது. உடல் முழுவதுமே இனித்து சிலிர்த்தது!

சோதிடர் அப்போதுதான் மாலைவேளைப் பூஜைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். இவனைப் பார்த்ததும் "வா அப்பனே, வா! வாணர்குலத்து வல்லத்தரையன்தானே?" என்றார். "ஆம் சோதிடரே! உம் ஜோசியம் முன் பின்னாக இருந்தாலும் உம்முடைய ஞாபக சக்தி பிரமாதம்!" என்றான் வந்தியத்தேவன்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## மலிவான பொருள்



ஒரு தடவை துருக்கி மன்னர் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார். அவருடைய பரிவாரத்துடன் முல்லாவும் சென்றார். மன்னர் பரிவாரத்துடன் சமையல்காரர் குழு ஒன்றும் சென்றது. சமையல்கார குழுவின் தலைவன் காட்டில் கூடாரமடித்து சமையல் செய்வதற்கான ஏற்பாடுகளில் முனைந்த போது அரண்மனையிலிருந்து உப்பு எடுத்துவர மறந்துவிட்டது தெரிந்தது.

சமையற்காரத் தலைவன் மன்னர் முன் சென்று அச்சத்தோடு தலை கவிழ்ந்து நின்றான். என்ன சமாச்சாரம் என்று மன்னர் விசாரித்தார். சமையல் குழுத்தலைவன் நடுங்கிக் கொண்டே தான் உப்பு எடுத்து வர மறந்துவிட்ட செய்தியைச் சொன்னான். மன்னர் சமையல் குழுத் தலைவனைக் கடுமையாகக் கண்டித்தார்.

பிறகு தனது வீரர்களில் ஒருவனை அழைத்து நீ குதிரை மீதேறி அண்மையிலிருக்கும் கிராமத்திற்குச் சென்று யார் வீட்டிலாவது கொஞ்சம் உப்பு வாங்கிவா என உத்தரவிட்டார்.

அப்போது முல்லா முன்னால் வந்து மன்னரை வணங்கினார். என்ன முல்லா ஏதாவது சொல்ல வேண்டுமா? என்று கேட்டார் மன்னர். ஆமாம் மன்னவா படைவீரனிடம் கொஞ்சம் காசு கொடுத்து அனுப்புங்கள். குடிமக்களிடம் உப்பு கடனாகக் கேட்க வேண்டாம் என்றார் முல்லா. ஏன் குடிமக்கள் ஒரு கை உப்பை இலவசமாகக் கொடுக்கக்கூட முடியாத நிலையில் இருக்கிறார்களா என மன்னர் ஆச்சரியமாக கேட்டார்.

மன்னர் பெருமானே நான் சொன்னதன் உட்பொருளைத் தாங்கள் அறிந்தால் மக்கள் ஒரு மூட்டை உப்பைக் கூட கடனாகக் கொடுப்பார்கள். ஆனால் மக்களுக்கு உங்கள் மீது இருந்த மரியாதை போய் விடும் என்றார் முல்லா. ஏன்? என்று கேட்டார் மன்னர். என்ன காரணத்தினால் நாம் உப்பு கேட்கிறோம் என்று மக்களுக்குத் தெரியாது.

உப்பு மிகவும் மலிவான பொருள். பரம ஏழை வீட்டிலும் உப்புக்குப் பஞ்சமிருக்காது. மன்னரிடம் உப்பு இல்லாமல் இல்லை. உப்பு கேட்கிறார் என்றால் அந்த அளவிற்கு அவர் நிலை கேவலமாகிவிட்டது என்று தான் மக்கள் உங்களைப் பற்றி நினைப்பார்கள். பின்னர் அவர்கள் உங்களை எப்படி மதிப்பார்கள்? அதனால் நமக்குத் தேவையான உப்பின் விலை மதிப்புக்கு அதிகமான பொருளை உப்பு தருபவருக்கு கொடுத்துவிட்டு உப்பை வாங்கிவரச் சொல்லுங்கள் என்றார் முல்லா.

அவர் சொன்ன தத்துவம் சரிதான் என்று துருக்கி மன்னருக்குத் தோன்றியது.

ஆகவே பணம் கொடுத்தே உப்பை வாங்கி வருமாறு படைவீரனுக்கு உத்தர விட்டார் மன்னர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தன்மீது ஏற்படும் எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும் போது உங்கள் உள் மனம் மேலும் அமைதியாக, திடமாக இருக்க வேண்டும். *– அறிஞர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கயிற்றில் முடிச்சு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்

*தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்டவடு* என்கிறார் வள்ளுவர்.

தீயினால் ஏற்பட்ட காயத்தின் தளும்பு வெளித் தெரிந்தாலும் உட்காயம் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்டவடு ஒருபோதும் ஆறாது. அதனாலேயே ஒருவர் எந்த அறத்தைக் காப்பாற்றத் தவறினாலும் நாவைக் காப்பாற்ற வேண்டும். இல்லையேல் அஃது இழுக்காகிவிடும்.

ஆகையால் எப்போதும் நாம் நல்ல சூழலுக்குப் பங்கம் இல்லாமல் நடந்து கொள்வது அவசியம். இதை நாம் மறந்து செயற்படுவோமாயின், எல்லாமும் அம்போ என்றாகிவிடும். இதற்குப் பல உதாரணங்கள் உண்டு.

அண்மையில் மாவீரர் தினம் அமைதியாக அனுஷ்டிக்கப்பட்டது. பெருந்திரளாக மக்கள் கூடி மாவீரர்களை நினைவேந்தினர்.

ஆம், மாவீரருக்கு அஞ்சலி செலுத்துங்கள் என யாரும் அழைக்கவில்லை. – வாகனங்கள் விட்டு ஏற்றவில்லை. இருந்தும் எந்த அழைப்பும் இல்லாமல், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று நினைவுச்சுடர் ஏற்றி தங்களின் அகவணக்கத்தைச் செலுத்தினர். இங்குதான் ஓர் உண்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது மாவீரர்கள் எங்கள் பிள்ளைகள். அவர்களை நினைவேந்தாமல் – அவர்களுக்கு அகவணக்கம் செலுத்தாமல் – அவர்களின் உறவுகளால் ஒருபோதும் இருக்க முடியாது.

அதனாலேயே கடந்த காலங்களில் மாவீரர்களை நினைவேந்துவதற்குப் பொலிஸாரும் படையினரும் தடைகளை ஏற்படுத்தியபோதும் அதனை கிஞ்சித்தும் பொருட்படுத்தாமல், எங்கள் மக்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று தங்களின் உறவுகளை – தமிழ் இனத்துக்காக இன்னுயிர் நீத்த தியாகிகளை வழிபட்டனர்.

இருந்தும் இந்த வருடம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சியில் மாவீரர்களை நினைவேந்துவதற்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. தடை விதிக்க வேண்டுமென பொலிஸார் நீதிமன்றங்களில் மனுத்தாக்கல் செய்யவும் இல்லை.

அதேநேரம் இவ்வாறு மாவீரர்களை நாம் நினைவேந்துவது சிங்களப் பேரினவாதிகளுக்கு கடும் கோபத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தவே செய்யும்.

இங்குதான் சிங்களப் பேரினவாதிகள் அநுரவின் ஆட்சிக்கு எதிராகக் கோசம் எழுப்பி, பேரினவாதப் பேய்க்கு பலிகொடுக்க முனைவர்.

எனவே மேற்குறித்த சூழ்நிலையை நாமும் புரிந்து கொள்வது அவசியம். ஏனெனில் நாட்டில் தற்போது கருக்கட்டியுள்ள சமாதான உயிர்ப்பை அறுத்தெறியப் பெரும் பிரயத்தனங்கள் நடக்கின்றன.

ஆகையால் நாட்டில் ஏற்பட்டுள்ள நல்ல சூழ்நிலையை நாம் அனைவரும் சேர்ந்து பாதுகாத்து அதனை வலுப்படுத்த வேண்டும்.

இதை நாம் செய்யாவிட்டால், அது பெரும் துரதிர்ஷ்டமாகிவிடும்.

உண்மை. ஓர் உயரிய இலட்சியத்துக்காக நாம் கைபிடித்துச் செல்லுகின்ற கயிறு அறுந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதைவிடுத்து கயிறு அறுந்தால், முடிச்சுப் போடலாம் எனச் சிலர் நினைக்கலாம்.

ஆனால் நாம் பிடித்துச் செல்கின்ற கயிற்றில் முடிச்சுகள் இருக்கவே செய்யும். கவனம்.

## சகல வேட்பாளர்களும் வெள்ளிக்கிழமைக்குள் செலவு விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும்

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் பிரசார செலவினம் தொடர்பான விபரங்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த காலப்பகுதிக்குள் தகவல்களைச் சமர்ப்பிக்காவிடின் சட்டவிரோதச் செயலைப் புரிந்ததாகக் கருதப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கத் தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்கள் தமது வருமான செலவின விபரத் திரட்டுக்களை வெவ்வேறாகத் தயாரித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் அந்தந்த வேட்பாளர்கள் போட்டியிட்ட மாவட்டங் களின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் தேர்தல்கள் செயலகத்துக்கும் ஒப்படைத்தல் வேண்டும்.

அதேபோல் அந்த வேட்பாளர்களுக்கு, வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய கட்சிகளின் செயலாளர்களுக்கு மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும் தேசியப் பட்டியல் வேட்பாளர்களுக்கும் தேர்தல் வருமான செலவின விபரத் திரட்டுக்களை ஒப்படைக்கக்கூடிய வகையில் பொதுவான கடமை நேரங்களில் பி.ப. 6 மணி வரையும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரையும் அனைத்து மாவட்டங்களின் தேர்தல் வருமான செலவின விபரத் திரட்டுக்களைக் கையேற்கும் விசேட அலகுகளைத் திறந்து வைப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது. (ம-7)

## பதுளையில் குளவிக்கொட்டு ஐவர் வைத்தியசாலையில்

பதுளை - லுணுகலை பிரதேசத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்கான ஐவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

லுணுகலை - அடாவத்தைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண் தொழிலாளர்கள் நால்வர் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில், அவர்களைப் பாதுகாப்பதற்கு முற்பட்ட தொழிற்சாலை ஊழியர் ஒருவரும் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இதன்படி 29 வயதுடைய ஆணொருவரும், 40 முதல் 56 வயதுக்கிடைப்பட்ட நான்கு பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குளவிக் கொட்டுக்கு இலக்கான ஐவரும் லுணுகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.(ம-7)

## கொழும்பில் உள்ள பேக்கரியில் தீ விபத்து

கொழும்பு, கொஹுவலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானம் ஒன்றிற்கு அருகில் உள்ள பேக்கரி ஒன்றில் நேற்று திங்கட்கிழமை காலை தீ விபத்து ஏற்பட்டதாக கொஹுவலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹிவளைத் தீயணைப்புப் பிரிவினர் இணைந்து தீப்பரவலைக் கட்டுப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீவிபத்தின்போது எந்தவித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்திற்கான காரணமோ அல்லது நஷ்டமோ கணக்கிடப்படவில்லை என்பதுடன்,

கொஹுவல பொலிஸாரும் தீயணைப்புச் சேவை திணைக்களமும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கிளிநொச்சி இ.போ.சவின் பணிப் பகிஷ்கரிப்பு நிறைவு

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலையில் இடம்பெற்ற பணிப் பகிஷ்கரிப்பானது சமரசப் பேச்சு வார்த்தைகளில் இணக்கப்பாடு எட்டப்பட்டமையின் பிரகாரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சாலையில் இடம்பெறும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு, பொது முகாமையாளரை மாற்ற வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே குறித்த போராட்டம் நேற்றுக் காலை முதல் இடம்பெற்றது.

இந்நிலையில் குறித்த சாலையின் பொதுமுகாமையாளரை மாற்றி நாளை (இன்று) புதிய முகாமையாளரை நியமிக்க கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டது.

இதனையடுத்து நண்பகல் 12 மணியுடன் பணிப் பகிஷ்கரிப்பு நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து பேருந்து சேவைகள் வழமைக்குத் திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)* (ம-7,271)

## கொடிகாமம் மடத்தடி வீதியை வெள்ளநீர் வழிந்தோடும் வகையில் புனரமைப்புச் செய்து தாருங்கள்

### ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்குக் கடிதம்

கொடிகாமம் மடத்தடி வீதியானது கடந்த 40 வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படவில்லை எனவும் இது தொடர்பில் பலமுறை பிரதேசசபையில் முறையிட்டும்பலன்கிடைக்கவில்லை.

எனவே தாங்கள் இதுகுறித்து ஆவன செய்ய வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் வடக்கு மாகாண ஆளுநரூடாக மனுவொன்று கிராம மக்களால் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கொடிகாமம் மடத்தடி வீதியானது இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் எமது கிராமவாழ் மக்கள் அவதியுற்று, அவ் வீதியினுடாகப் பிரயாணம் செய்கின்றனர். அண்மையில் பெய்த கனமழையின் போதும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதியின்மையால் வெள்ள நீர் வடிந்தோட முடியாத காரணத்தால் எமது கிராம மக்கள் மூன்று நாட்களுக்கு வீட்டின் உள்ளேயே முடங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே இந்த வீதியூடாக பயணிக்கும் அன்றாட கூலிவேலை செய்பவர்கள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

இது தொடர்பாக நீண்ட நாட்களாக எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் பிரதேசசபைச் செயலாளரிடம் தெரிவிக்கப்பட்ட போதும் எந்தவித முன்னேற்றமும் இடம் பெறவில்லை என தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருவதோடு இது தொடர்பில் குறித்த கிராம மக்களின் வாழ்வாதார நலன் கருதி குறித்த வீதியைப் புனரமைப்பதுடன் வெள்ளநீர் வடிந்தோடும் வகையில் திருத்தித் தருமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ம-7)

## இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது நேற்று முறையே 286.39 ரூபாவாகவும், 294.97 ரூபாவாகவும் உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (29) அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 286.57 ரூபாவாகவும், 295.04 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

மத்திய கிழக்கு நாணயங்களுக்கு எதிராக ரூபாவின் பெறுமதி நேற்று சிறிதளவு வீழ்ச்சி கண்ட அதேநேரம், ஏனைய பல வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக நிலையானதாக உள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாத இராசி பலன்கள்-2024



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது - சுக ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சந்திரன் - பஞ்சம ஸ்தானத்தில் சுக்கிரன் - களத்திர ஸ்தானத்தில் சனி - அஷ்டம ஸ்தானத்தில் ராகு - தொழில் ஸ்தானத்தில் குரு(வ) - அயன சயன போக ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15-12-2024 அன்று சூரியன் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-12-2024 அன்று சுக்கிரன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** சிம்ம இராசியினரே... இந்த மாதம் பணவரத்து எதிர்பார்த்ததை போல இருக்கும். எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். அதே வேளையில் இராசியை செவ்வாய் பார்ப்பதால் மற்றவர்களிடம் உங்கள் கருத்துக்களை கூறும்போது அவர்கள் தவறாக அதை புரிந்து கொள்ளலாம்.

தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி அகலும். எதிர்பார்த்த அளவு வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். கூட்டு தொழில், வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நன்மை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க நேரும். மேலதிகாரிகள் கூறுவதை கேட்டு அதன்படி நடப்பது நல்லது. சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். கணவன், மனைவியிடையே மனஸ்தாபங்கள் அகலும். எனவே கவனமாக எதையும் பேசுவது நல்லது. பிள்ளைகளிடம் அன்புடன் பேசுவது நன்மை தரும். அக்கம் பக்கத்தினருடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பெண்கள் விவேகமாக செயற்படுவது வெற்றியை தரும். எதிர்பார்த்ததற்கு மாறாக காரியங்கள் நடக்கலாம். கவனம் தேவை. வீண் அலைச்சல் ஏற்படும்.

கலைத்துறையினருக்கு எதிர்ப்பாலினத்தவரிடம் பழகும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும். நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். அரசியல்துறையினருக்கு நினைக்கும் காரியங்கள் தள்ளிபோகலாம். வீண் அலைச்சல் வேலைப்பளு இருக்கும்.

மேலிடத்திடம் நெருக்கம் அதிகரிக்




கும். மனம் மகிழும் காரியங்கள் நடக்கும். மாணவர்கள் ஆசிரியர்கள் கூறுவதை கவனமாக கேட்டு அதன்படி நடப்பது வெற்றிக்கு உதவும். வீண் அலைச்சலை தவிர்ப்பது நல்லது.

## எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும்!

**மகம்:** இந்த மாதம் வீண் மனக் கவலை உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். அலைச்சலால் சரியான நேரத்திற்கு உணவு உண்ண முடியாத நிலை ஏற்படலாம். பணவரவு இருக்கும். வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் ஏற்படும்.

**பூரம்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத போட்டிகள் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் அதிக முதலீடு செய்யும் முன் யோசிப்பது நல்லது. கடன் விடயங்களில் கவனம் தேவை. பழைய பாக்கிகள் சிறிது தாமதத்திற்கு பின் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும்.

**உத்தராடம்:** இந்த மாதம் குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், நெடுந்தூர பயணங்களின் போதும் கவனமாக இருப்பது நல்லது.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமையில் சிவன் கோயிலுக்கு சென்று சிவனையும் நவகிரகத்தில் சூரியனையும் தீபம் ஏற்றி வழிபடுவது எல்லா நன்மைகளையும் உண்டாக்கும்;

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வெள்ளி

**அதிஷ்ட தினங்கள்:** 3, 4, 30, 31;

**சந்திராஷ்டம தினங்கள்:** 9, 10



**கிரகநிலை** - இராசியில் கேது - தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சந்திரன் - சுக ஸ்தானத்தில் சுக்கிரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி - களத்திர ஸ்தானத்தில் ராகு - பாக்கிய ஸ்தானத்தில் குரு(வ) - லாப ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15-12-2024 அன்று சூரியன் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-12-2024 அன்று சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** கன்னி இராசியினரே... இந்த மாதம் எதிர்ப்புகள் அகலும். பகை விலகி எதிலும் வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். தகராறுகள் வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் எதையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எண்ணப்படி எல்லாம் நடக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உங்களது செயல்களுக்கு தடை ஏற்படுத்தியவர்கள் தாமாகவே விலகி விடுவார்கள். பணவரத்து கூடும். தொழிலை விரிவாக்கம் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

குடும்பத்தில் இருந்த மனவருத்தங்கள் மாறி சுமூகமான நிலை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். திருமண முயற்சி கைகூடும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். பெண்கள் சாதக பாதகங்களை பற்றி கவலைப்படாமல் எந்த காரியத்தையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும்.

கலைத்துறையினர் பேச்சு திறமையால் காரியங்களை சாதகமாக செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும். பயணங்கள் செல்ல நேரலாம். வீண்வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. காரிய தாமதம் ஏற்பட்டாலும் சாதகமான பலன் கிடைக்கும். அரசியல் துறையினருக்கு எதிர்பார்த்த காரியங்கள் தடைகளின்றி முடியும்.

எதிர்ப்புகள் மறையும். பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்பு கரம் நீட்டுவார்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். மன உறுதி அதிகரிக்கும். மாணவர்களுக்கு




போட்டிகள் குறையும். எதிலும் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

## எதையும் துணிச்சலாகச் செய்து முடிப்பீர்கள்!

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் வீண் அலைச்சல் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் ஏற்படும். வாக்கு வன்மையால் அனுகூலம் உண்டாகும். எந்த காரியத்தையும் யோசித்து செய்வது நல்லது. பணம் சார்ந்த கஷ்டங்கள் குறையும். காரிய வெற்றியும் நன்மையும் உண்டாகும்.

**அத்தம்:** இந்த மாதம் காரிய அனுகூலம் உண்டாகும். எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். சுய நம்பிக்கை அதிகரிக்கும். இராசிநாதன் புதன் சஞ்சாரத்தால் புத்தி தெளிவு உண்டாகும். எந்த பிரச்சினையும் எதிர்கொள்ளும் தைரியம் உண்டாகும்.

**சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் மனதை கவலை கொள்ளச் செய்த பிரச்சினைகளில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு சாதகமான பலன் கிடைக்க பெறலாம். தொழில், வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும், சிறப்பாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். எதிர்பார்த்த பண உதவியும் கிடைக்க பெறும். வேலை தேடி கொண்டு இருப்பவர்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் வரும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும்.

**பரிகாரம்:** புதன்கிழமையில் ஆஞ்சநேயரை வெண்ணை சாற்றி வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். மனோ தைரியம் கூடும். **அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, புதன், வெள்ளி ;

**அதிஷ்ட தினங்கள்:** 5, 6

**சந்திராஷ்டம தினங்கள்:** 11, 12, 13

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி...

கிளிநொச்சி மாவட்டத்தின் பொருளாதார நிலை தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபருடன் சுவிஸ் அதிகாரிகள் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கைக்கான சுவிஸ் தூதரக மற்றும் குடிவரவு - குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனை நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த சந்திப்பு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள், பொருளாதார நிலைவரங்கள், மீள்குடியேற்றம், கண்ணிவெடி அகற்றல் மற்றும் புகலிடக் கோரிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் இடம்பெயர்வுக்கான மாநில செயலகத்தின் Consultant Meinrad Lindt மற்றும் Country Analyst Andreas Schmid உள்ளிட்ட சுவிஸ் தூதுரக அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,33,60)

## உணவு வழங்க...

குடும்பத்தினருக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிராம சேவையாளர் உணவு வழங்க மறுத்தமையால், தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்து கிராம சேவையாளர் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் தனது கடமைக்கு இடையூறு விளைவித்தார்கள் என முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இருவரைக்கைது செய்திருந்தனர்.

அந்நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர், தமக்குக் கிராம சேவையாளர் உணவு வழங்க மறுத்தமையால், அதற்குக் காரணம் கேட்டதால் தனது கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என பொய் முறைப்பாட்டை வழங்கியதால், இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும், தமக்கு நீதி வேண்டும் எனக் கோரி நேற்றுத் திங்கட்கிழமை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து பிரதேச செயலர், தாம் பக்க சார்பற்ற விசாரணைகளை முன்னெடுத்து, உரிய நடவடிக்கைகளை எடுப்போம் என உறுதி அளித்தார்.

அதேவேளை அங்கு வருகை தந்த பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், தாமும் பக்கச் சார்பற்ற விசாரணைகளை முன்னெடுப்போம் என உறுதி அளித்தார். (ம-7,33,60)

## நீரோட்டத்தில்...

நீரோட்டத்தில் சடலம் ஒன்று இழுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீனவர்கள் அப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் நடத்தி வருகின்றனர்.

நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் தொண்டைமானாறு ஊடாக வங்கக் கடலை நோக்கி சடலம் ஒன்று நீரோட்டத்தில் இழுத்துச் செல்லப்படுவதை அப்பகுதியில் நின்ற சிலர் கண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இச்சம்பவம் தொடர்பில் பிரதேச செயலர் மற்றும் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து வல்வெட்டித்துறைப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றனர். தற்போது மீனவர்கள் கடற்பகுதியில் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையில் மாலை வரை சடலம் மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

## கிணற்றிலிருந்து...

நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கையளிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை யாழ்ப்பாண மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் நேற்று சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பில் மானிப்பாய்ப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யாழ்.இளைஞர்...

"பிரான்ஸ், பெல்ஜியத்திற்குச் செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள் உக்ரைனிற்கு எதிராகப் போரிடுவதற்காக ரஷ்ய இராணுவத்தில் கட்டாயமாக இணைக்கப்பட்டுள்ளனர் என வெளியான செய்தி குறித்து இலங்கைக்கான ரஷ்ய தூதரகம் கவனம் செலுத்தியுள்ளது.

இவ்வாறான தகவல்கள் ஆதாரமற்றவை, அடிப்படையற்றவை என்பதைத் தூதரகம் வலியுறுத்த விரும்புகின்றது.

உறுதிப்படுத்தப்படாத தகவல்களை நாங்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். இந்தத் தகவல்களின் நோக்கம் இலங்கை ரஷ்யா இடையிலான பாரம்பரிய நட்புறவை சீர்குலைப்பதாகும்.

எங்கள் நாட்டிற்கு வருகை தரும் அனைத்து வெளிநாட்டவர்களையும் ரஷ்ய அதிகாரிகள் மதிக்கின்றனர். அவர்களின் விருப்பத்திற்கு, தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்புக்களை வழங்கத் தயாராகவுள்ளனர்.

ரஷ்யாவில் தங்கியிருக்கின்ற இலங்கையர்கள் தொடர்பான விடயத்தினை மொஸ்கோவில் உள்ள ரஷ்யாவிற்கான இலங்கைத்தூதரகமே கையாள்கின்றது என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

நேர்மையற்ற வேலைவாய்ப்பு முகவர்கள் இலங்கையர்களை ரஷ்யாவிற்கு அனுப்புவது குறித்து தூதரகத்திற்கு எந்தத் தகவலும்கிடைக்கவில்லை.

இதேவேளை இந்த விடயம் குறித்து இலங்கை அரசாங்கத்திடமிருந்து உதவிகள் கோரப்பட்டால் அதற்கு உதவுவதற்கு நாங்கள் தயாராகவுள்ளோம்" என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## கல்வி...

ஆர்ப்பாட்டத்தில் நேற்று ஈடுபட்டிருந்தது.

பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 4 வருடங்களாகப் பாடசாலைகளில் கற்பித்து வருவதால் தம்மை ஆசிரியர்களாக நியமிக்கு மாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மீனவர்...

களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலின்போதே மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வினை அரசாங்கத்தினூடாகப் பெற்றுக்கொடுப்பதாக உறுதியளித்தார்.

இதன்போது விநாயகபுரம் மீனவர்களினால் மகஜர் ஒன்றும் கடற்றொழில் பிரதி அமைச்சர் ரி.ஜி.ரத்னகமகேவிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2024.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் 5673 — Z 3 0 1 1 0 5 — அத சம்பத Z 1 1 0 5 — சீட்டிழுப்பு இலக்கம் 248

தன நிதானய — திகதி - 2024.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் - 1703 — H 04 24 26 59 H — Double Chance 73328

மெகா பவர் — திகதி 02/12/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2021 — Y 26 08 11 38 74 — 194179

லக்ஸ் 7 VIP — திகதி 2024.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0499 — Z 0 5 6 0 7 0 Z

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3915 — சீட்டிழுப்பு திகதி 02.12.2024 — M 14 32 71 72 — M 156888

HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2024.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0982 — தனுசு 01 02 20 46 தனுசு — 022705 — 44

உத்தியோகபூர்வ முடிவுகள் — 02.12.2024 — வெற்றி வாரம் 381 — V 9 9 0 0 5 3 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,519,890.80

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2647 — சீட்டிழுப்பு திகதி 2024.12.02 — தினம் திங்கட்கிழமை — 05 10 63 75 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,591,499.20

சனிதா — 02.12.2024 — வெற்றி வாரம் 4808 — 17 19 48 69 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,030,868.80

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4359 — சீட்டிழுப்பு திகதி 02.12.2024 — தினம் திங்கட்கிழமை — 09 41 46 48 — மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,878,141.60

S 30 10 22 40 44 — 1823 — 02.12.2024 திங்கட்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.556,990,295.20

ஜயோதா Jayoda — 2024.12.02 — வெற்றி வாரம் 2082 — 15 24 32 40 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,580,001.20

அட கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2473 — சீட்டிழுப்பு திகதி 2024.12.02 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,972,828.80 — 05 33 50 56 T


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தட்டுப்பாடு இன்றி நியாயமான விலையில் அரிசி விநியோகிக்குக

## அரிசி உற்பத்தியாளர்களிடம் ஜனாதிபதி

*(கொழும்பு)*

தட்டுப்பாடு இன்றி நியாயமான விலையில் அரிசியை விநியோகிக்குமாறு அரிசி உற்பத்தியாளர்களிடம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தட்டுப்பாடு இன்றி, நியாயமான விலைகளில் மக்களுக்கு தொடர்ச்சியாக அரிசி விநியோகிப்பதன் அவசியம் குறித்து ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்

எதிர்வரும் மாதங்களில் நுகர்வோருக்கு தட்டுப்பாடின்றி நியாயமான விலையில் தொடர்ச்சியாக அரிசி வழங்க வேண்டியதன் அவசியத்தை சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களிடம் எடுத்துரைத்த ஜனாதிபதி, அதற்காக எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்தும் அவர்களுடன் கலந்துரையாடினார்.

அத்துடன் மக்களுக்கு தட்டுப்பாடின்றி அரிசியை வழங்கும் வகையில் நாட்டில் களஞ்சிய வசதிகளை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

பெறுமதி சேர்க்கும் உற்பத்திகளுக்கு நாட்டு அரிசியைப் பயன்படுத்துவதால், நுகர்வுக்கு தேவையான இருப்புகளில் தட்டுப்பாடு நிலவுவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் உரமானியத்தை தேசிய உற்பத்திக்கான செயற்திறனுடன் பயன்படுத்தும் நோக்கில் QR குறியீட்டு முறைமை அறிமுகப்படுத்துவது தொடர்பிலும் இங்கு ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

இதில் வர்த்தகம்,வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, லக் சதொச தலைவர் கலாநிதி சமித்த பெரேரா மற்றும் சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் உள்ளிட்டோர் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர். (ம-7)

## க.பொ.த (சா/த) பரீட்சை

# விண்ணப்பங்களுக்கான கால அவகாசம் நீடிப்பு

*(கொழும்பு)*

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 2024 (2025) கான விண்ணப்பங்களுக்கான காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் டிசம்பர் 10, 2024 வரை விண்ணப்பங்களுக்கான காலக்கெடு நீடிக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

# வவுனியாவில் விபத்து இருவர் காயம்

*(வவுனியா)*

வவுனியாவில் நேற்று மாலை இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா புகையிரத பூங்கா வீதியூடாக வந்த மோட்டார் சைக்கிள் பிரதான வீதியான புகையிரத நிலைய வீதிக்கு ஏற முற்பட்ட சமயத்தில் வவுனியா நகரிலிருந்து புகையிரத நிலைய வீதி ஊடாகப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் 1990 அவசர நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வைத்தியசாலைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## இந்திய உயர்ஸ்தானிகருடன் சபாநாயகர் சந்திப்பு

*(கொழும்பு)*

சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா இடையிலான நீண்டகால உறவுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகவும் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக விவகாரங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவுப்பரி மாற்றம் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதாகவும் பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இங்கு கருத்துரைத்த இந்திய உயர்ஸ்தானிகர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கான கருத்துப் பரிமாற்ற நிகழ்வுகளை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்துள்ளார் என பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## ஒதியமலைப்...

முல்லைத்தீவு ஒதியமலைக் கிராமத்தில் 1984.12.02 ஆம் திகதியன்று இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 32 தமிழ் மக்களின் 40ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது.

ஒதியமலைக் கிராமத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி வளாகத்தில் குறித்த நினைவேந்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்தவகையில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு ஈகச் சுடரேற்றப்பட்டதுடன், நினைவுத் தூபிகளுக்கு மலர் தூவி, மலர்மாலை அணிவிக்கப்பட்டு உறவுகளால் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த நினைவிட வளாகத்தில் நினைவேந்தல் கூட்டமொன்று இடம்பெற்றதுடன், அதனைத் தொடர்ந்து ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு விசேட ஆத்மசாந்தி வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இந்த நினைவேந்தல் நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், பத்மநாதன் சத்தியலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-7,299)

## மாவீரர்களை...

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் மீண்டும் பிரிவினைவாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்க வேண்டிய தேவை வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களுக்குக் கிடையாது. தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசுக்கு ஒட்டு மொத்தத் தமிழ் மக்களும் ஆதரவளித்துள்ளார்கள்.

இந்த அரசில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பிரதான பங்காளிகளாக உள்ளனர். அனைத்து இன மக்களின் ஒத்துழைப்புடன் சிறந்த அரச நிர்வாகத்தை முன்னெடுப்போம்.

வடக்கு, கிழக்கில் மாவீரர் தினத்தைத் தமிழ்மக்கள் அனுஷ்டிப்பதால் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இனவாதத்தை முன்னிலைப்படுத்தி தெற்கில் அரசியல் செய்யும் தரப்பினர் வீணாக அச்சமடையத் தேவையில்லை. என்றார். (ம-7)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1708)

உலர் உணவுப் பொருட்கள்
அனர்த்த கால நிவாரணத்திற்காக உலர் உணவுப் பொதிகளை வழங்க விரும்புவோர் எம்மிடம் சிறந்த விலையில் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.
Happy Supermarket
உரும்பிராய்
077 350 4700
(593)

## மரண அறிவித்தல்



### குருநாதி முருகையா

தோற்றம்: 09.08.1947 மறைவு: 02.12.2024

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மயிலணி வடக்கு, சுன்னாகத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதி முருகையா அவர்கள் நேற்று 02.12.2024 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருநாதி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான முருகர் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பராணி அவர்களின் அன்புக் கணவரும் ஸ்ரீரஞ்சித் (ஆசிரியர் - யா/வட்டு இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புத் தந்தையாரும் விஹர்ஷினி அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03.12.2024 செவ்வாய்க்கிழமை மதியம் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 [illegible]

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

(2658)

றோயல் அக்கடமி
ROYAL ACADEMY
நாவலர் றோட், நல்லூர். அரசடி றோட், யாழ். நகர்.
கல்வியாண்டு - 2025
தரம் 6 தமிழ்மொழி மூலம் English Medium
ஆரம்பம் 04.12.2024 புதன்கிழமை காலை 7 மணி
கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், I.C.T, சிங்களம்
ஆகிய பாடங்களை ஒரே இடத்தில் கற்பதற்கான அரியவாய்ப்பு!
(2657)
குறிப்பு : ● மாதாந்தப் பரீட்சைகள் இடம்பெறும், (புள்ளிகள் பெற்றோருக்கு வழங்கப்படும்.)
● ஒவ்வொரு தவணை முடிவிலும் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு இடம்பெறும்.
- இயக்குநர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.